699

786

# ஈமான், இஸ்லாம்

முதற் பாகம்

'தைபுல் இஸ்லாம்' ஆசிரியர்
மௌலானா மௌலவி
அஹ்மத்ஸயீத் சாஹிப் அவர்களால்
இயற்றப்பட்டது

சென்னை
"தைபுல் இஸ்லாம்"
பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது

1936 [விலை அணு 2.

Q7
N36
78136

# "ஸைபுல் இஸ்லாம்" புத்தகசாலை

---

முஸ்லிம் சமூகத்தினரின் சீர்திருத்த முன்னேற்றத்தைக் கருதி முஸ்லிம்கள் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய நூற்கள், தற்கால உலகப் போக்கிற்கும் நாகரீகத்திற்கும் ஏற்றவாறு இயற்றப்பட்டுள்ள நமது சொந்த நூற்கள், இதர இஸ்லாமிய நூற்கள், உயர்தர செந்தமிழ் நாவல்கள் முதலிய மற்றும் பல நூற்களும் விலை சகாயமாக நமது புத்தகசாலையில் கிடைக்கும்.

நூற்களின் விலை விவரமடங்கிய கேட்லாக் $\frac{3}{4}$ அணா தபால் தலை அனுப்புகிறவர்களுக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

மானேஜர்:

"ஸைபுல் இஸ்லாம்" புத்தகசாலை,
47, செம்புதாஸ் தெரு,
சென்னை.

786

# ஈமான், இஸ்லாம்

முதற் பாகம்

'ஸைபுல் இஸ்லாம்' ஆசிரியர்
மௌலானா மௌலவி
அஹ்மத்ஸயீத் சாஹிப் அவர்களால்
இயற்றப்பட்டது

சென்னை
"ஸைபுல் இஸ்லாம்"
பிரஸ்ஸில் அச்சிடப்பட்டது

1936

[ரிஜிஸ்டர்ட்]

# முகவுரை

---

முபஸ்மிலன், முஹம்திலன்,
முஸல்லியன், வமுஸல்லிமா

**சகோதரர்காள் !**

நந்தமிழ்நாட்டில் புதிதாக இஸ்லாத்தைத் தழுவும் நல் முஸ்லிம்களும், இஸ்லாத்திலேயே பிறந்து **ஈமான், இஸ்லாம் தொழுகை** முதலிய இஸ்லாத்தின் கட்டளைகளை செவ்வனே அறியாதிருக்கும் முஸ்லிம்களும் எளிதில் அறிந்து கொள்ளும் பொருட்டு **மேற்கண்ட** விஷயங்களடங்கிய இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

இந்நூலில் முஸ்லிம்கள் செய்யவேண்டிய முதற் கடமைகளான ஈமான், **இஸ்லாம், தொழுகை, நோன்பு, ஜக்காத்து, ஹஜ்ஜு, உலு, குஸல்,** முதலிய முக்கிய கட்டளைகளெல்லாம் விவரமாகக் கூறப்பட்டுள்ளன.

ஆரம்பமாக இஸ்லாத்தின் கட்டளைகளை கற்பவர்களுக்கு எளிதில் விளங்கும்படி செந்தமிழ் எளிய நடையில் இந்நூல் வரையப்பட்டுள்ளது.

ஈமான், **இஸ்லாம்** முதலிய கட்டளைகள் அறியாதவர்கள் இந்நூலை படித்துணர்வார்களேல், அவர்கள்மீது கடமையான இஸ்லாத்தின் கட்டளைகளை நிறைவேற்ற சாதகமாக இருக்குமென்பதை நாம் கூறித் தெரியவேண்டுவதில்லை.

இஸ்லாத்தைத் தழுவிய நவ்முஸ்லிம்கட்கு இந்நூலிற் கண்டுள்ள விஷயங்களை கற்றுக்கொடுக்க வேண்டியது முஸ்லிம்களின் கடமையாகும்.

ஆகையால் இயல்புள்ள முஸ்லிம் கனவான்கள் ஒவ்வொருவரும் இந்நூலை வாங்கி **புதிதாக** இஸ்லாத்தைத் தழுவும் நவ்முஸ்லிம்களுக்கு இலவசமாக வினியோகஞ் செய்து இகபர நன்மைகளைக் கொள்ளையிட்டுக் கொள்வார்களாக! ஆமீன்!!

நூலாசிரியர்

— அஹ்மத் லெபீத்

# ஈமான்

**லாஇலாஹ இல்லல்லாஹு முஹம்மதுர் ரஸூலில்லாஹி.**

"வணக்கத்திற்குரியவன் அல்லாஹுத ஆலாவைத் தவிர வேறுயாருமில்லை. ஹஜ்றத் முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள் அல்லாஹு தஆலாவின் திரு தூதாக இருக்கிறார்கள்"

என்று வாயால் மொழிந்து மனதால் உறுதி கொள்ள வேண்டும். இவ்விரண்டும் ஈமானிலுள்ள முக்கிய பாலுகளாகும்.

## ஈமான் முஜ்மல்

கலிமாவைச் சொன்ன பின் அல்லாஹுத் ஆலாவைப் பற்றி ஈமான் முஜ்மல்படி உறுதி கொள்ளவேண்டும். அதாவது:—

**ஆமன்து பில்லாஹி கமா ஹுவ பி அஸ்மாஇஹி வ ஸிபாத்திஹி வ கபில்து ஜமீஅ அஹ்காமிஹி.**

"அல்லாஹு தஆலாவை அவனுடைய திருநாமங்களுடனும், ஸிபத்துகளென்னும் தன்மைகளுடனும் நான் விசுவாசங்கொண்டேன்; அவனுடைய கட்டளைகளனைத்தையும் நான் ஒப்புக் கொண்டேன்"

என்று உறுதி கொள்ள வேண்டும்.

### ஈமான் முபஸ்ஸல்

விபரமான முறைப்படி ஈமான் கொள்வதாவது:—

**ஆமன்து பில்லாஹி, வ மலாயிகத்திஹி' வ குத்துபிஹி, வ ரஸூலிஹி. வல்யவ்மில் ஆகிரி வல்கத்ரி கைரிஹி வஷர்ரிஹி மினல் லாஹி தஆலா வல் பஃதி பஃதல் மௌத்.**

"அல்லாஹு தஆலாவையும், அவனது அமரர்களையும், அவனது வேதங்களையும், அவனது தூதர்களையும், கடைசி நாளையும், நன்மை, தீமை அல்லாஹு தஆலாவின் நாட்டத்தில் நின்றுமுள்ளது, மரணத்திற்குப் பின் உயிர் பெற்றெழும்புவது ஆகியவைகளையும் நான் உறுதி கொள்ளுகிறேன்."

என்று நன்னம்பிக்கை கொள்வதாகும்.

---

# இஸ்லாம்

---

இஸ்லாத்தில் ஐந்து கடமைகள் (பர்லுகள்) இருக்கின்றன.

1, கலிமா ஷஹாதத்து அதாவது:—

அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல் லாஹு வஹ்தஹு லா ஷரீக்க லஹு வ அஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்துஹு வ றஸூலுஹு

"வணக்கத்திற் குரியவன் அல்லாஹு தஆலாவைத் தவிர் வேறு யாருமில்லை. அவன் தனித்தவன். அவனுக்கு யாரும் இணை இல்லை என்றும், இன்னும் ஹஜ்ரத் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்

கள் அவனது அடிமையாகவும் தூதராகவும் இருக்கிறார்கள் என்றும் நான் சாக்ஷியம் கூறுகிறேன்.''

என்று சொல்லி உறுதி கொள்ளல்.

2. ஐந்து நேரத்துத்தொழுகைகளையும் நிறைவேற்றுதல்

3. ரமலான் மாதத்தில் நோன்பு வைத்தல்.

4. போதிய பணமுள்ளவர்கள் ஜக்காத்து என்னும் ஏழை வரி கொடுத்தல்.

5. ஹஜ்ஜுக் கடமைக்குரிய அம்சம் பெற்றவர்கள் மக்கமா நகருக்குச் சென்று வயதில் ஒரு முறை ஹஜ்ஜுச் செய்தல்.

---

# உலு

---

தொழுவதற்கு முன் உலுச் செய்து கொள்ளவேண்டும். அதாவது தொழுகைக்குச் செல்லவேண்டுமானல் பெருந் தொடக்கு சிறு தொடக்கு ஆகிய இரண்டுவகை அசுத்தத்தை விட்டுச் சுத்தமாக இருக்கவேண்டும். ஆகவே, சிறு தொடக்கு என்பது உலுவில்லாமலிருப்பதாகும். ஆகவே உலுச் செய்யும் விபரத்தையும் தெரிந்திருப்பது அவசியமாகும்.

## உலுவின் பர்லுகள்

உலுவில் 4 பர்லுகள் உண்டு. அவை வருமாறு:—

1. முகங்கழுவுதல். அதாவது நெற்றியின் ரோமம் தொடுத்து நாடிக்குழிவரைக்கும், இரண்டு காதுகள்வரையிலும் முகம்கழுவவேண்டும்.

2. இருகையையும் முழங்கைஉள்படக் கழுவுதல்.

3. தலையில் நாலிலொரு பாகம் மஸஹ்செய்தல்,

4. இரண்டு கால்களையும் கரண்டை மொழிகள் உள்படக் கழுவுதல்.

## உலுவின் ஸுன்னத்துகள்

உலுவில் 13 ஸுன்னத்துகள் உண்டு. அவை பின் வருமாறு:—

1. உலுச்செய்வதாக நிய்யத்துச்செய்தல்,

2. பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் பிஸ்மில்லாஹில் அலீம் வல்ஹம்து லில்லாஹி அலாதீனில் இஸ்லாம் அல் இஸ்லாமுஹக்குன் வல்குப்று பாத்திலுன் என்று ஓதுதல்.

3. இரண்டு கைகளையும் மணிக்கட்டு வரை கழுவுதல்,

4. மிஸ்வாக்குச் செய்தல்,

5. மூன்றுமுறை வாய் கொப்பளித்தல்,

6. மூன்றுமுறை நாசிக்கு நீர் செலுத்திச் சுத்தம்செய்தல்,

7. அடர்ந்த தாடியைக்கோதுதல்.

8. கழுவவேண்டிய உருப்புகள் ஒவ்வொன்றையும் மும்மூன்றுமுறை கழுவுதல்,

9. கைகால் விரல்களைக்கோதிக் கழுவுதல்.

10. தலைமுழுவதும் மஸ்ஹுசெய்தல்

11. தலைக்கு எடுத்த தண்ணீரால் இரண்டு காதுகளையும் மஸ்ஹு செய்தல்.

12. வரிசைக்கிரமமாக உலுச்செய்தல்.

13. உருப்புகள் உலர்ந்துவிடுவதற்குமுன் அடுத்த உருப்புகளைக் கழுவுதல்.

## உலுவின் முறிச்சல்கள்

1. முன்துவாரம் பின்துவாரம் ஆகியவைகளிலிருந்து மலம், ஜலம், காற்று இது போன்றவைகள் வெளிப்படுதல்,

2. தேகத்திலிருந்து இரத்தம், சீ, சலம் ஆகியவைகள் வெளிப்படல்,

3. வாய் நிறம்ப வாந்தி எடுத்தல்,

4. படுத்து நித்திரை செய்தல், அல்லது ஒன்றின்மேல் பலமாகச் சாய்ந்து நித்திரை செய்தல்,

5. பைத்தியம் பிடித்தல்,

உலுச் செய்தவனுக்கு மேற்கண்ட 5 காரியங்களில் ஒன்று ஏற்பட்டாலும் உலு முறிந்துபோய் விடும்.

---

# ஐந்து நேரத் தொழுகைகள்

---

தினந் தோறும் 5 வேளை தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

1. **பஜ்ர:**—கிழக்கு வெளுத்து மெய் வெள்ளை தோன்றியதிலிருந்து சூரியோதயத்துக்குள். முதலில் இரண்டு ரக்கஅத்து ஸுன்னத்து. பிறகு இரண்டு ரக்கஅத்து பர்லு.

2. **லுஹர்:**—உச்சிப் பொழுது சாய்ந்ததிலிருந்து தன் னிழல் இரண்டு மடங்கு வரும் வரை. ஸுன்னத்து 4 ரக்கஅத்து. பர்லு 4 ரக்கஅத்து, அடுத்த ஸுன்னத்து 2 ரக்கஅத்து, நபில் 2 ரக்கஅத்து.

3. **அஸர்:**—தன்னிழல் இரண்டு மடங்கு வந்ததிலிருந்து சூரியாஸ்தமனத்திற்கு முன் வரை. 4 ரக்கஅத்து பர்லு.

4. **மக்ரிபு:**—சூரியாஸ்தமனத்திலிருந்து செம்மேகம் மறையும் வரை. பர்லு 3 ரக்கஅத்து, சுன்னத்து 2 ரக்கஅத்து, நபில் 2 ரக்கஅத்து.

5. **இஷா:**—செம்மேகம் மறைந்ததிலிருந்து கிழக்கு வெளுப்பதற்கு முன்வரை. பர்லு 4 ரக்கஅத்து, சுன்னத்து 2 ரக்கஅத்து, நபில் 2ரக்கஅத்து வித்றுவாஜிபு 3 ரக்கஅத்து.

## தொழுகையின் பர்லுகள்

1. அந்தந்த நேரத்தில் தொழுகையை நிறைவேற்றுதல்
2. உடல்சுத்தம்.
3. உடைசுத்தம்.
4. இடம்சுத்தம்.
5. தேகத்தை மூடியிருத்தல்.
6. கிப்லாவின் பக்கம் முன்னோக்குதல்,
7. நிய்யத்துச்செய்தல்.
8. ஆரம்ப தக்பீர் சொல்லுதல்.
9. நிலைநிற்றல்.
10. கிராஅத்து ஓதுதல்.
11. ருக்கூஉ செய்தல்.
12. ஸுஜூது செய்தல்.
13. தொழுகையின் கடைசி இருப்பு.
14. வரிசைக்கிரமமாக பர்லுகளை அந்தந்த இடத்தில் நிறைவேற்றல்.
15. தொழுகையிலிருந்து வெளியாகுதல்.

மேற்கண்ட 15 பர்லுகளில் ஒன்று தவறிப்போனாலும் தொழுகை நிறைவேறாது. மறுபடியும் திருப்பத்

தொழுவது பர்லாகும். திரும்பத்தொழுக நேரமில்லை எனில் தொழுகையை கலாச் செய்ய வேண்டும்.

ஆடவர்கள் தொப்புளிலிருந்து முழங்கால் வரை தேகத்தை மறைத்துத் தொழுகவேண்டும். ஸ்திரீகள் முகம், இரண்டு கைப்பஞ்சாக்கள், கால்பாதங்கள் ஆகியவைகள் தவிர தேகத்திலுள்ள மற்றைய அங்கங்கள் எல்லாவற்றையும் மறைத்துத் தொழுகவேண்டும். மறைக்கவேண்டிய அங்கங்களில் ஒன்றில் நாலிலொரு பாகம் திறந்திருந்தால் தொழுகை கூடாது.

தொழுகிற இடம் சுத்தமாக இருக்கவேண்டும். தொழுகிறவனின் உடையும் சுத்தமாக இருக்கவேண்டும், உடையிலாவது, இடத்திலாவது அசுத்தமேற்பட்டிருந்தால் தொழுகை நிறைவேறாது.

## தொழுகையின் வாஜிபுகள்

1. தக்பீர் சொல்லும்போது "அக்பர்" என்ற வார்த்தையைச் சொல்லுதல்.

2. 3-4 ரக்க அத்துத் தொழுகைகளில் முதலாவது இருப்பு.

3. அத்தஹிய்யாத்து ஓதுதல்

4. ருக்கூஉ, ஸுஜூதில் ஒரு தஸ்பீஹ்நேரம் தாமதித்திருத்தல்.

5 ருக்கூலிருந்தும் ஸஜ்தாவிலிருந்தும் எழுந்திருத்தல்.

6. ஒவ்வொரு பர்லையும் அதனை நிறைவேற்ற வேண்டிய இடத்தில் நிறைவேற்றுதல்.

7. ஒவ்வொரு வாஜிபையும் அதனை நிறைவேற்ற வேண்டிய இடத்தில் நிறைவேற்றல்.

8. தொழுகையை முடிக்கும்போது "ஸலாம்" என்ற வார்த்தையைச் சொல்லி முடித்தல்.

9. பர்ளுத் தொழுகையில் முதல் இரண்டு ரக்கஅத்தில் கிராஅத்து ஓதுதல்.

10. அல்ஹம்து ஸூரத்தை ஒருமுறை ஓதுதல்.

11. அல்ஹம்துக்குப் பிறகு வேறு ஒரு ஸூரத்து அல்லது ஆயத்துகள் ஓதுதல். பெரிய ஆயத்தாக இருந்தால் ஒரு ஆயத்து அல்லது சிறிய ஆயத்தாக இருந்தால் 3 ஆயத்துகள் ஓதுதல்.

12. வித்றுத் தொழுகையில் குனூத்து ஓதுதல்.

13. மெதுவாக ஓத வேண்டிய இடத்தில் மெதுவாக ஓதுதல்.

14. இறைந்து ஓத வேண்டிய இடத்தில் இமாம் இறைந்து ஓதுதல்.

15. முக்ததீ அதாவது இமாமைப் பின்றொடர்ந்து தொழுபவர் கிராஅத் ஓதாமல் சும்மா இருத்தல்.

16. இமாமைத் தொழுகையில் எந்த நிலைமையில் பெற்றுக் கொள்கிறோமோ அதே நிலைமையில் அவரைப் பின் பற்றுதல்.

17. ஸஜ்தா திலாவத்துச் செய்தல்.

18. இரண்டு பெருநாள்களின் தக்பீர்களையும் சொல்லுதல்.

19. பெருநாள் தொழுகையில் இரண்டாவது ரக்அத்திலும் தக்பீர் சொல்லுதல்.

20. ஸஜ்தா ஸஹ்வு செய்தல்.

தொழுகையிலுள்ள வாஜிபுகளை மறந்து செய்யாமல் விட்டு விட்டால் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும். ஒரு

வாஜிபை விட்டு விட்டாலும் ஸஜ்தா ஸஹ்வு செய்ய வேண்டும். வேண்டுமென்றே வாஜிபை விட்டு விட்டால் தொழுகையைத் திரும்பத் தொழுவது வாஜிபு.

## ஸஜ்தா ஸஹ்வு செய்யும் விதம்

கடைசி இருப்பில் **அத்தஹிய்யாத்து அப்துஹூ வரஸூலுஹூ** வரை ஓதி முடித்து வலது பக்கம் ஸலாம் கொடுத்து இரண்டு ஸஜ்தாச் செய்ய வேண்டும். மறுபடியும் இருப்பிலிருந்து **அத்தஹிய்யாத்து**, ஸலவாத்து, **துஆயே மாஸூரா** முதலியவைகள் ஓதி வழக்கம் போல் இருபுறமும் ஸலாம் கொடுத்து தொழுகையை முடிக்க வேண்டும்.

## தொழுகையின் ஸுன்னத்துகள்

1. இரண்டு கைகளையும் கிப்லாவுக்கு நேராக முந்தின தக்பீர் சொல்லும்போது உயர்த்துதல்.

2. வித்ருடைய குனூத்தில் தக்பீர் சொல்லும்போது இரண்டு கைகளையும் கிப்லாவுக்கு நேராக உயர்த்துதல்.

3, இரண்டு பெருநாள்களிலும் அதிகப்படியான தக்பீருகளில் இரண்டு கைகளையும் உயர்த்துதல்.

4. விரல்களை அதிகம் விரிக்காமலும், ஒன்று சேர்க்காமலும் இரண்டுக்கும் மத்தியில் வைத்திருத்தல்.

5. முக்ததீ(இமாமைப்பின்பற்றித் தொழுகிறவன்)களுக்கு கேட்கும்படி இமாம் தக்பீரை இறைந்து சொல்லுதல்.

6. முக்ததீ இமாமுக்கு முந்தாமல் அவரைப் பின்றொடர்ந்து தக்பீர் சொல்லுதல்.

7. இமாமுடன் தொழுகிறவன் கிராஅத்தைத் தவிர மற்றவைகளை இமாமைப் போல் ஓதுதல்.

8. தக்பீர் சொன்னபின் சுண்டுவிரலையும் பெருவிரலையும் கொண்டு மணிக்கட்டைப்பிடித்து, மற்ற மூன்று விரல்களை

விரித்து ஆடவர்கள் தொப்புளுக்குக் கீழிலும், பெண்டீர்கள் நெஞ்சின் பேரிலும் வலதுகையை இடது கை மீது வைத்து தக்பீர் கட்டுதல்,

9. தனா ஓதுதல். அதாவது:—

சுப்ஹானகல்லாஹும்ம வபிஹம்திக வ தபாரகஸ்முக வதஆலா ஜத்துக வ லாஇலாஹ கைருக

என்று அமர்ந்து ஓதுதல்.

10. அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம்

என்று மெதுவாக ஓதுதல்.

11. பிஸ்மில்லாவை ஒவ்வொரு ரக்கஅத்தின் துவக்கத்திலும் மெதுவாக ஓதுதல்.

12. ஆமீனை மெதுவாக ஓதுதல்.

13. குனூத்துடைய தக்பீர்.

14. ருக்கூஉவுடைய தக்பீர்.

15. ருக்கூஉவில் சுப்ஹான றப்பியல் அலீம் என்று மூன்று விடுத்தம் ஓதுதல்.

16. ருக்கூஉவில் இரண்டு கைகளையும் கொண்டு இரண்டு முட்டுக்கால்களையும் பிடித்தல்.

17. அதில் விரல்களை விரித்து வைத்தல்.

18, சிறு நிலை நிற்றல் (இது ஒரு சொற்படி)

19. ஸமிஅல்லாஹு லிமன் ஹமிதா என்று சொல்வது. இதை தனித்துத் தொழுபவர்களும் இமாமும் சொல்ல வேண்டும்.

20. அல்லாஹும்ம றப்பனா லகல் ஹம்து என்றுஓதுதல். இதை இமாம்ஜமாஅத்தாகத் தொழும்போது முக்ததீகள்

மாத்திரம் ஓதவேண்டும். தனியாகதொழுவோர்கள் ஸமி அல்லாஹு லிமன் ஹமிதாவுடன் சேர்த்து ஓதவேண்டும்.

21. ஸுஜூதுடைய தக்பீர் சொல்லுதல்.

22. அதனைவிட்டு நிமிரும்போது தக்பீர் சொல்லுதல்.

23. இரண்டு ஸுஜூதிலும் ஸுப்ஹான றப்பியல் அஃலா என்று மூன்று விடுத்தம் ஓதுதல்.

24. தலை, இரண்டுகை. இரண்டு முட்டு, இரண்டு பாதம் ஆக 7 உருப்புகளைக்கொண்டு ஸஜ்தா செய்தல்.

25. இரண்டு ஸஜ்தாவுக்குமிடையில் சிறு இருப்பிருத்தல்.

26. கடைசி இருப்பு அத்தஹிய்யாத்தில் ஸலவாத்து ஓதுதல்.

27. மேற்கண்ட ஸலவாத்துக்குப் பிறகு துஆயே மாஸூரா ஓதுதல்.

28. இரண்டு இருப்பிலும் ஆண்பிள்ளை வலது காலை நட்டி, இடதுகாலின் பேரில் உட்காருதல். பெண் பிள்ளைகள் புட்டியின்பேரில் உட்காருதல்

29. ஸலாம் கொடுக்கும்போது வலது பக்கமும் இடது பக்கமும் இருக்கிறவர்களை நிய்யத்துச் செய்து ஸலாம் சொல்லல்.

## தொழுகையை முறிக்கும் காரியங்கள்

1. பேசுதல்,
2. தின்னுதல்,
3. குடித்தல்,
4. மனிதர்களிடம் கேட்கக்கூடிய இவ்வுலகத்தின் காரியத்தைப்பற்றி துஆ ஓதுதல்,

5. "ஆஹ்" என்ற வார்த்தையைப்போல் இரண்டு அல்லது மூன்று அக்ஷரங்கள் உள்ளவார்த்தை யுண்டாகும்படி முணுமுணுத்தல்.

6. "ஹூ" என்ற வார்த்தையைப்போல் இரண்டு மூன்று அக்ஷரங்களுள்ள வார்த்தை யுண்டாகும்படி அலறுதல்,

7. இவ்வுலகத்தின் கஷ்டங்களைப்பற்றி அழுதல்,

8 பிறருக்கு ஸலாம் சொல்லுதல்,

9. பிறருடைய ஸலாத்திற்கு பதில் ஸலாம் சொல்லுதல்,

10 குர்ஆன் ஆயத்து முதலியவைகளைக் கண்ணால் பார்த்து ஓதுதல். அல்லது தொழுகைக்கு வெளியிலுள்ள ஒருவர் ஓதுவதைக் கேட்டு ஓதுதல், அர்த்தம் பேதகமாகும்படி பிழையாக ஓதுதல்,

11 "ஹூ ஹூ என்பது போல இரண்டு அக்ஷரங்கள் வெளியாகும் விதமாகக் காரணமின்றி இருமுதல், கனைத்தல், ஏப்பம் விடுதல்,

12. சப்தம் வெளியாகும்படிச் சிரித்தல்,

13. தொழுகைக்காக அல்லாமல் வேறு காரியத்திற்காக உருப்புகளை அசைத்தல் போன்ற மிகுந்த செய்கைகள் செய்தல்,

14. பர்லான காரியத்தைச் செய்யாமல் விட்டுவிடுதல்,

15. உலுவை முறிக்கிற காரியங்கள் நிகழ்தல்.

## தொழுகையின் மக்றூஹு தஹ்ரீம்கள்

1. தனது அங்கவஸ்திரத்தைத் தோளின்மீது போட்டுத் தொங்கவிடுதல்.

2. ஸுஜூதுக்குப் போகும்போது முன்னால் அல்லது பின்னால் துணியை உயர்த்திகொள்ளுதல்.

3. மலம், ஜலம், காற்று இவைகளை அடக்கிக் கொண்டு தொழுதல். ஆனால், இவைகளைக் கழித்துவிட்டுவந்தால் ஜமா அத்துத் தப்பிப்போகும் என்றும், வேறு ஜமாஅத்துக்கிடைக் காது என்று மிருந்தால் இவைகளை அடக்கிக்கொண்டு தொழு கையில் சேர்ந்து கொள்ளலாம்.

4. விரல்களில் நெட்டி முறித்தல்.

5. இடுப்பில் கையை வைத்து நிற்குதல்.

6. காரணமில்லாமல் அதாவது உதுரு இல்லாமல் முகத்தை வலம் இடம் திருப்பல், காரணமில்லாமல் நெஞ்சை கிப்லாவை விட்டுத்திருப்பினால் தொழுகை பஸாதாகிவிடும்.

7. ஸுஜூதில் முழங்கையைப் படுக்க வைத்துக்கொ ள்ளல்.

8. மனிதர்களுடைய முகத்திற்கு எதிரில் நின்று தொழு தல். ஆனால், ஒருவர் தொழுதுகொண்டிருக்கும்போது மற்றொ ருவர் அவருக்கு எதிரில் தனது முகத்தைத் திருப்பி உட்கார் ந்து கொண்டாலும் அல்லது நின்று கொண்டாலும் அந்தக் குற்றம் அப்படித் திரும்பி இருப்பவர் மீது தான் ஏற்படும். தொழுபவர் மீது ஏற்படாது.

9. இரண்டு கைகளையும் பூமியின் பேரில் வைத்துத் துடையை நட்டு, முட்டுக்காலிரண்டையும் நெஞ்சுடன் சேர்த்து, இரண்டு புட்டியின் பேரில் உட்கார்ந்து கொள்ளுதல் அதாவது நாய் குந்தி உட்காருவது போல் குந்தி உட்காருதல்.

10. கொட்டாவி வந்தால் அதனை விழுங்கி விடாமல் அல்லது வாய் மூடிக் கொட்டாவி விடாமல் வேண்டுமென்றே இருத்தல்.

11. வாயையும், மூக்கையும் வீணாக மூடிக் கொள்ளல்.

12. சரீரத்தையும், புடவையையும், மூக்கையும் வீணாக மூடிக் கொள்ளல்.

13. இமாம் ஒரு முழம் உயரமுள்ள மேட்டிலும், முக்ததீகள் பள்ளத்திலும் காரணமில்லாமல் நிற்குதல்.

14. உயிர் பிராணிகளின் உருவமுள்ள துணிகளை அணிதல், ஆனால் உருவம் மிகச் சிறிதாக இருந்தாலும், மறைக்கப்பட்டிருந்தாலும், துட்டு காசு இவைகளின் பேரில் இருந்தாலும், தலை அறுபட்டிருந்தாலும், கையிருந்தாலும், மிதிக்கப்பட்டிருந்தாலும் மக்ரூஹல்ல.

15. கால் ரூபாயின் அளவிற்கு கனத்த நஜீஸ் (அசுசை) இருப்பதைத் தெரிந்து கொண்டு அதனைக் கழுவாமல் தொழுதல்.

16. முந்தின ஸப்பில் இடமிருக்க பிந்தின ஸப்பில் நிற்குதல்.

மேற்கண்ட செய்கைகளை செய்தால் தொழுகை மக்ரூஹு தஹ்ரீமுடன் கூடிப்போகும், ஆனால் தொழுகையைத் திருப்பித் தொழுவது வாஜிபு.

## அத்தஹிய்யாத்து

அத்தஹிய்யாத்து லில்லாஹி வஸ்ஸலாத்து வத்தையி பாத்து அஸ்ஸலாமு அலைக்க அய்யு ஹன்னபிய்யு வறஹ்மத் துல்லாஹி வபரகாத்துஹூ அஸ்ஸலாமு அலைனு வ அலா இபாதில்லாஹிஸ்ஸாலிஹீன் அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹூ வஅஷ்ஹது அன்ன முஹம்மதன் அப்து ஹூ வ றஸூலுஹூ.

ஸலவாத்து:—அல்லாஹும்ம ஸல்லி அலா முஹ ம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமா ஸல்லைத்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத்; அல்லாஹும்ம பாரிக் அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் கமாபாரக்த அலா இப்ராஹீம வ அலா ஆலி இப்ராஹீம இன்னக ஹமீதுன் மஜீத்.

துஆயே மாஸூரா:—அல்லாஹும் மக்பிர்லீ வலிவாலிதய்ப வலி உஸ்தாதீ வலிஜமீஇல் மூமினீன வல் மூமினாத்தி, வல்முஸ்லிமீன வல்முஸ்லிமாத்தி அல்அஹ்யாஇ மின்ஹும் வல் அம்வாத்தி இன்னக முஜீபுத் தஅவாத்தி பிரஹ்மத்திக யா அர்ஹமர்ராஹிமீன்.

## துஆ குனூத்து

அல்லாஹும்ம இன்னா நஸ்தஈனுக்க வ நஸ்தக்பிருக வநூமினுபிக வநத்தவக்கலு அலைக்க வநுதுனி அலைக்கல் கைர். வநஷ்குருக வலா நக்புருக வநக்லஉ வநத்ருக்கு மன்ய்யப்யஜுருக, அல்லாஹும்ம இய்யாக்க நஉபுது வலக்கநுஸல்லீ வநஸ்ஜுது இலைக்க வநக்ஷா அதாபக இன்ன அதாபக்க பில் குப்பாரிமுல்ஹிக்.

# திரு குர்ஆனின்
# சில ஸூரத்துகள்

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ

نَسْتَعِيْنُ ۝ اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۝ غَيْرِ

الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

## ஸூரத்துல் பாத்திஹா

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன். அர் ரஹ்மானிர்ரஹீம் மாலிகி பௌமித்தீன். இய்யாக நஃபுது வ இய்யாக நஸ்தஈன். இஹ்தி நஸ்ஸிருத்தல் முஸ்தகீம் ஸிருத்தல்லதீன அன்அம்த்த அலைஹிம் கைரில் மஃலூபி அலைஹிம்வ லள்ளால்லீன். (ஆமீன்)

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

أَلَمْ تَرَ كَيْفَ فَعَلَ رَبُّكَ بِأَصْحٰبِ الْفِيْلِ ۝
أَلَمْ يَجْعَلْ كَيْدَهُمْ فِيْ تَضْلِيْلٍ ۝ وَّأَرْسَلَ
عَلَيْهِمْ طَيْرًا أَبَابِيْلَ ۝ تَرْمِيْهِمْ بِحِجَارَةٍ مِّنْ
سِجِّيْلٍ ۝ فَجَعَلَهُمْ كَعَصْفٍ مَّأْكُوْلٍ ۝

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

அலம் தர கைப பஅல றப்புக பி அஸ்ஹாபில் பீல்.
அலம் யஜ்அல் கைத ஹும் பீ தலு லீலின்வ் வஅர் ஸல
அலைஹிம் தைரன் அபா பீல தர்மீஹிம் பிஹிஜாரத்தின்ம்
மின் ஸிஜ்ஜீல். ப ஜஅலஹும் கஅஸ்பின்ம் மஉக்கூல்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

لِإِيْلٰفِ قُرَيْشٍ ۝ إِيْلٰفِهِمْ رِحْلَةَ الشِّتَاءِ
وَالصَّيْفِ ۝ فَلْيَعْبُدُوْا رَبَّ هٰذَا الْبَيْتِ ۝
الَّذِيْ أَطْعَمَهُمْ مِّنْ جُوْعٍ وَّاٰمَنَهُمْ مِّنْ خَوْفٍ ۝

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்

லி ஈலாபி குறைஷின் ஈலாபிஹிம் ரிஹ்லதஷ்ஷி தாயி வஸ்ஸைப். பல்யஃபுது றப்பஹாதல் பைத்தில்லதீ அத்அம ஹூம் மின்ஜூஇன்வ் வ ஆமனஹூம் மின் கௌப்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

تَبَّتْ يَدَآ اَبِيْ لَهَبٍ وَّتَبَّ ۝ مَآ اَغْنٰى عَنْهُ
مَالُهٗ وَمَا كَسَبَ ۝ سَيَصْلٰى نَارًا ذَاتَ
لَهَبٍ ۝ وَّامْرَاَتُهٗ حَمَّالَةَ الْحَطَبِ ۝
فِيْ جِيْدِهَا حَبْلٌ مِّنْ مَّسَدٍ ۝

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்

தப்பத் யதா அபீ லஹபின்வ் வதப்ப, மா அங்ஞ அன்ஹூமாலு ஹூ வ மாகஸப், ஸயஸ்லா நாறன் தாத்த லஹபின்வ்வம்ரஅத்துஹூ ஹம்மாலதல் ஹத்தபி பீ ஜீதிஹா ஹப்லுன்ம் மின்ம்மஸத்.

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ ۝

قُلْ هُوَ ٱللَّهُ أَحَدٌ ۝ ٱللَّهُ ٱلصَّمَدُ ۝ لَمْ يَلِدْ
وَلَمْ يُولَدْ ۝ وَلَمْ يَكُن لَّهُۥ كُفُوًا أَحَدٌۢ ۝

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்

குல் ஹுவல்லாஹு அஹது. அல்லாஹுஸ்ஸமது. லம்யலித். வலம் யூலத். வலம்யகுன்ல்லஹு குபுவன் அஹது.

بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ ۝

قُلْ أَعُوذُ بِرَبِّ ٱلْفَلَقِ ۝ مِن شَرِّ مَا خَلَقَ ۝
وَمِن شَرِّ غَاسِقٍ إِذَا وَقَبَ ۝ وَمِن شَرِّ ٱلنَّفَّٰثَٰتِ
فِى ٱلْعُقَدِ ۝ وَمِن شَرِّ حَاسِدٍ إِذَا حَسَدَ ۝

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்

குல் அஊது பிறப்பில் பலக். மின்ஷர்ரி மா கலக். வ மின் ஷர்ரி ஙாஸிகின் இதா வகப். வமின் ஷர்ரின்னப்பா தாத்தி பில்உகத். வமின் ஷர்ரி ஹாஸிதின் இதா ஹஸத்.

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

قُلْ أَعُوْذُ بِرَبِّ النَّاسِ ۝ مَلِكِ النَّاسِ ۝
إِلٰهِ النَّاسِ ۝ مِنْ شَرِّ الْوَسْوَاسِ
الْخَنَّاسِ ۝ الَّذِيْ يُوَسْوِسُ فِيْ
صُدُوْرِ النَّاسِ ۝ مِنَ الْجِنَّةِ وَالنَّاسِ ۝

பிஸ்மில்லா ஹிர் ரஹ்மானிர் ரஹீம்

குல்அஊது பிறப்பின்னாஸ், மலிக்கின்னாஸ், இலாஹின்னாஸ், மின்ஷர்ரில் வஸ்வாஸில் கன்னாஸில்லதீ யுவஸ்விஸு பீஸுதூரின்னாஸி மினல் ஜின்னதி வன்னாஸ்.

---

## தொழுகைக்குப் பின் ஓதும் துஆக்கள்

---

அல்லாஹும் அன்தஸ் ஸலாம் வ மின்கஸ் ஸலாம் வ இலைக யஊதுஸ் ஸலாம், ஹய்யினா ரப்பனா பிஸ்ஸலாம் வ அத்கில்னா தாரஸ் ஸலாம் தபாரக்த்த ரப்பனா வ தஆலைத்த யாதல் ஜலாலி வல் இக்ராம்,

றப்பனா ஆத்தினா பித்துன்யா ஹஸனத்தன் வ பில் ஆகிரத்தி ஹஸனத்தன் வகினா அதாபந்நார்,

## நாயகம் மீது ஸலவாத்து

அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அலா ஆலி முஹம்மதின் வ பாரிக் வஸல்லிம் அலைஹி

# பாங்கு சொல்லும் விதம்

அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்!
அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்!
அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்!
அஷ்ஹது அன்லா இலாஹ இல்லல்லாஹ்!
அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்!
அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ்!
ஹைய்ய அலஸ் ஸலாத்!
ஹைய்ய அலஸ் ஸலாத்!
ஹைய்ய அலல் பலாஹ்!
ஹைய்ய அலல் பலாஹ்!
அல்லாஹு அக்பர், அல்லாஹு அக்பர்,
லா இலாஹ இல்லல்லாஹ்!

இவ்வாறு ளுஹர், அஸர், மக்ரிப், இஷா ஆகிய நான்கு நேரங்களிலும் பாங்கு சொல்ல வேண்டும். ஆனால், பஜ்ருத் தொழுகையின் நேரத்தில் மாத்திரம்,

ஹைய்ய அலல் பலாஹ் என்று இரண்டாம் முறை சொன்னதற்குப்பிறகு,

அஸ்ஸலாத்து கைருன்ம் மினன் நவ்ம்!
அஸ்ஸலாத்து கைருன்ம் மினன் நவ்ம்!

என்று கூற வேண்டும். இதற்குப்பிறகு "அல்லாஹு அக்பர் அல்லாஹு அக்பர் லா இலாஹ இல்லல்லாஹ்" என்று கூறி பாங்கு சொல்லி முடித்து கொள்ள வேண்டும்.

## காமத்துச் சொல்லும் விதம்

பாங்கு சொல்வதுபோலவே காமத்தும்சொல்ல வேண்டும். ஆனால், பாங்கை மெதுவாக நிறுத்தி நிறுத்திச்சொல்ல

வேண்டும். காமத்துச் சொல்வதை நிறுத்தி நிறுத்திச் சொல்லாமல் விரைவாகச் சொல்லவேண்டும்.

ஆனால், பஜ்ருடைய நேரத்தில் அதிகப்படியாகச் சொல்கிற அஸ்ஸலாத்து கைருன்ம் மினன் நவ்ம் என்ற வாக்கியங்களை சொல்லாமல்

கத் காமத்திஸ் ஸலாத்
கத் காமத்திஸ் ஸலாத்

என்று கூறவேண்டும், ஐந்து நேரத்துத் தொழுகைக்கும் காமத்து ஒன்று போல் கூற வேண்டும். அவைகளில் வித்தியாசமில்லை.

## பாங்குக்கு பதில் சொல்லுதல்

ஐந்து நேரத்துத் தொழுகைக்கும், ஜுமுஆத்தொழுகைக்கும் பாங்கு, காமத்துச் சொல்வது ஆண் பிள்ளைகளுக்கு சுன்னத் முஅக்கதா; மற்றைய தொழுகைகளுக்கு அவைகள் சுன்னத்தல்ல. பெண்களுக்கு இவைகள் மக்றூஹ். பாங்கு, காமத்துச் சொல்லும் போது கிப்லாவை முன்னோக்கி இருக்கவேண்டும். பாங்கு, காமத்துச் சொல்லும் போது வேறு பேச்சுப் பேசவும் கூடாது; நடக்கவும் கூடாது. பாங்கு சொல்பவர் ஹைய்ய அலஸ்ஸலாத்து என்று சொல்லும் போது வலது பக்கமும், ஹைய்ய அலல் பலாஹ் என்று சொல்லும்போது இடது பக்கமும் திருப்ப வேண்டும்.

பாங்கு சொல்லும் சப்தம் வந்தால் வேறு பேச்சுப் பேசாமல் முஅத்தின் சொல்வது போலவே சொல்ல வேண்டும். ஆனால், முஅத்தின் ஹைய்ய அலஸ்ஸலாத், என்று சொல்லும் போது லாஹௌல வ லா குவ்வத்த இல்லா பில்லாஹ் என்றும், ஹைய்ய அலல் பலாஹ் என்று சொல்லும் போது மா ஷா அல்லாஹ் கான வ மா லம்யஷஉ லம் யகுன் என்றும் சொல்ல வேண்டும்.

பஜ்றுடைய வேளையில் முஅத்தின் அஸ்ஸலாத்து கைருன்ம் மினன் நவ்ம் என்று சொல்லும் போது ஸதக்த வ

Q7 N36



பார்த்த வபில் ஹக்கி நதக்த என்று சொல்ல வேண்டும். அஷ்ஹது அன்ன முஹம்மதர் ரஸூலுல்லாஹ் என்று முதல் தடவை கூறும் போது ஸல்லல்லாஹு அலைக்கயா றஸூலல்லாஹ் என்று சொல்ல வேண்டும். இரண்டாவது முறை சொல்லும்போது இருகண்களின்மீது இரு பெருவிரல் பின்பக்கத்தை வைத்துக்கொண்டு கர்ரத் ஐனீ பிக்க யாறஸூலல்லாஹ் அல்லாஹும்ம மத்திஃனீ பிஸ்ஸம்இ வல்பஸரி என்று சொல்லவேண்டும்.

இம்மாதிரி பாங்குக்கு ஜவாபு சொன்ன பின், பாங்குக்குப் பிறகு ஓதுகிற துஆவை ஓத வேண்டும்.

## பாங்கு துஆ

அல்லாஹும்ம றப்பி ஹாதிஹித் தஅவத்தித்தாம்மா, வஸ் ஸலாத்தில் காயிமா, ஆத்தி முஹம்மதினில் வஸீலத்த வல் பளீலத்த வப்அதுஹு மகாமன் மஹ்மூதனில் லதீ வஅத்தஹு வர்ஜுக்ஞு ஷபாஅத்தஹு யௌமல் கியாமா, இன்னக்க லாதுக்லிபுல் மீஆத்,

## இஸ்திக்பார்

அஸ்தஃபிருல்லாஹல் அலீம், அஸ்தஃபிருல்லாஹல் அலீம், அஸ்தஃபிருல்லாஹல் அலீம் அல்லதீ லா இலாஹ இல்லாஹுவல்ஹையுல் கையூம், வ அத்தூபு இலைஹி வ அஸ் அலுஹுத் தௌபத்த.

## தொழுக வேண்டிய ஒழுங்கு முறை

பஜ்ரு பர்லு 2 ரகஅத்து
தொழுகும் விதம்

முதலில் கிப்லாவை முன்னோக்கி இரண்டு கைப் பெருவிரல்களையும் காதின் சோணைகளைத் தொடும்படி உயர்த்தி

78136

இரண்டு கைவிரல்களையும் விரித்து உள்ளங்கைகளை கிப்லாப்பக்கம் திருப்பி,

**இந்த பஜ்ருடைய பர்லான தொழுகை 2 ரகஅத்தை அல்லாவுக்காக தொழுகிறேன்**

என்று நிய்யத்துச் சொல்லி **அல்லாஹூ அக்பர்** என்று தக்பீர் கூறி தொப்புளுக்குங் கீழ் இடது கை மணிக்கட்டின் மீது வலது உள்ளங்கையை வைத்து மூன்றுவிரல்களை இடது கைமேல் நீட்டி வைத்து பெருவிரலையும், சுண்டுவிரலையும்வளையம்போல் இடது கை மணிக்கட்டைப் பிடித்து தக்பீர் கட்டிக் கொள்ள வேண்டும்,

பிறகு **தனா** ஓத வேண்டும். தனா ஓதிய பிறகு **அவூதும்** பிஸ்மிலும் ஓதி அல்ஹம்து ஸூராவும் வேறு ஒரு ஸூராவும் அல்லது சிறு 3 ஆயத்து அல்லது பெரிய ஒரு ஆயத்து ஓத வேண்டும்.

கிராஅத்து ஓதி முடிந்தபின் **அல்லாஹூ அக்பர்** என்று சொல்லி **ருக்கூஉ** செய்ய வேண்டும். அதாவது:—

பித்தட்டுக்குச் சரியாக தலை இருக்கும்படி குனிந்து இரு முழங்கால்களையும் இரண்டு கைகளால் பிடித்துக்கொள்ளவேண்டும். அப்பொழுது விரல்கள் விரிந்திருக்கவேண்டும்.

ருக்கூஇல் **ஸூப்ஹான றப்பியல் அளீம்** என்று 3, அல்லது 5, அல்லது 7 தடவை ஓதவேண்டும்.

பிறகு **ஸமிஅல்லாஹூ லிமன் ஹமிதா அல்லாஹூம்ம றப்பனா லகல் ஹம்து** என்று சொல்லிக்கொண்டு கிமிர்ந்து நிற்க வேண்டும். இதற்கு சிறு நிலை என்று பெயர்.

பிறகு "**அல்லாஹூ அக்பர்**" என்று சொல்லிக்கொண்டு **ஸஜ்தாச்** செய்ய வேண்டும். ஸஜ்தாவில், முதலாவது இரண்டு முட்டுக்கால்களைப் பூமியில் வைத்து பிறகு 2-கைகளையும் பூமியில் வைக்க வேண்டும். இருகை பெருவிரல்

களுக்கு நேராக இரு காதுகளும் இருக்கும்படி முதலில் மூக்கும், பின்னர் நெற்றியும் பூமியில் படும்படி வைக்க வேண்டும். கை விரல்கள் அதிகம் விரியாமல் கிப்லாவின் பக்கமாக வைக்கவேண்டும். கைகள் விலாவுடன் சேர்ந்து இருக்கக் கூடாது, இரு கால் துடைகளும் வயிறும் சேர்ந்திருக்கக் கூடாது. முதுகு வளைந்து கொண்டிருக்கக் கூடாது. தேகத்தின் சுமை ஸஜ்தாவின் 7 அங்கங்களில் சமமாக இருக்க வேண்டும்.

ஸஜ்தாவில் ஸுப்ஹான றப்பியல் அஃலா என்று 3, அல்லது 5, அல்லது 7 முறை ஓத வேண்டும்.

பிறகு "அல்லாஹு அக்பர்" என்று சொல்லிக்கொண்டு தலையை உயர்த்தி முழங்காலின்மீது கையை வைத்து உட்கார வேண்டும். பிறகு அல்லாஹு அக்பர் என்று சொல்லிக் கொண்டு முதல் ஸஜ்தாச் செய்ததுபோல் இரண்டாவது ஸஜ்தாச் செய்யவேண்டும். இரண்டாவது ஸஜ்தாவில் முதல் ஸஜ்தாவில் ஓதியது போல் தஸ்பீஹ் ஓத வேண்டும்.

பின்னர் அல்லாஹு அக்பர் என்று சொல்லிக்கொண்டு 2 வது ரகஅத்துக்காக எழுந்து நிற்கவேண்டும்.

நின்றபின் முந்திய ரகஅத்தில் ஓதியது போலவே அல்ஹம்தும், ஸூரா அல்லது ஆயத்துகள் ஓத வேண்டும். தஆ, அவூது ஓதக் கூடாது.

கிராஅத்து ஓதி முடிந்தவுடன் முந்தின ரகஅத்துக்குச் செய்தபடியே ருக்கூஉ, சிறுநிலை, ஸஜ்தாச் செய்ய வேண்டும்.

முந்தின ரகஅத்தில் ருக்கூஉ, சிறு நிலை, ஸுஜூது இவைகளில் ஓதியது போல் ஓத வேண்டும்,

இரண்டாவது ரகஅத்து 2-வது ஸஜ்தாவிலிருந்து அல்லாஹு அக்பர் என்று சொல்லிக் கொண்டு நிமிர்ந்து இருப்பில் உட்காரவேண்டும். வலது காலை நிற்கும்படி செய்துஇடது காலை படுக்க வைத்து இடதுகாலின் மீது பித்தட்டை வைத்து உட்காரவேண்டும். இரண்டு முட்டுக்காலின் மீதும் இருகை

களை வைத்து **அத்தஹிய்யாத்து**, ஸலவாத்து, **துஆயே மாஸூரா** வேண்டும். அத்தஹிய்யாத்தில் **அஷ்ஹது அன் லாஇலாஹ இல்லல்லாஹு** என்று ஓதும்போது "லா'' என்றவிடத்தில் வலது கை கலிமா விரலை உயர்த்தி **இல்லல்லாஹ்** என்று சொல்லும் போது கலிமா **விரலைத்** தாழ்த்தி வைக்கவேண்டும்.

**துஆயே மாஸூரா** ஓதி முடித்தபின் முதலாவதுவலது பக்கமும் இரண்டாவது இடது பக்கமும் **அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத் துல்லாஹி** என்று சொல்லி முகத்தைத் திருப்பி **ஸலாம்** கொடுக்க வேண்டும்.

பின்னர் துஆ ஓதவேண்டும்.

## மக்ரிபு பர்லு 3 ரகஅத்து தொழுகும் விதம்

முதல் 2 ரகஅத்துகளை மேலே கூறப்பட்டுள்ளபடி தொழுது இருப்பிருந்து **அத்த ஹிய்யாத்து அப்துஹூ வற ஸூலுஹூ** வரை மட்டும் ஓதி, மூன்றாவது ரகஅத்துக்காக **அல்லாஹு அக்பர்** என்று சொல்லிக் கொண்டு எழுந்து நிலை நிற்க வேண்டும். நிலையில், **ஸூரா பாத்திஹா** மட்டும் ஓதி **ருக்கூஉ, சிறுநிலை, ஸஜ்தாச்** செய்து இருப்பிருந்து **அத்தஹிய் யாத்து**, ஸலவாத்து **துஆயேமாஸூரா** ஓதி இருபுறமும் ஸலாம் கொடுத்து தொழுகையை முடிக்க வேண்டும்.

## பர்லு 4 ரகஅத்து தொழுகும் விதம்

முன்போல் 2 ரகஅத்துகளைத் தொழுது இருப்பில் அத்தஹிய்யாத்து **அப்துஹூ வறஸூலுஹூ வரை** ஓதி **அல்லாஹு அக்பர்** என்று சொல்லிய வண்ணம் நிலைக்குப் போய் ஸூரா பாத்திஹா மட்டும் ஓதி **ருகூஉ, சிறுநிலை, ஸஜ் தாச்** செய்து **அல்லாஹு அக்பர்** என்று சொன்னவனாக நிலைக்குச் சென்று நிலையில் 3வது ரக அத்தைப்போல் ஸூரேபாத்

திஹா மட்டும் ஓதி 4வது ரகஅத்திற்காக ருகூஉ, சிறு நிலே, ஸஜ்தாச் செய்து இருப்பிருந்து அத்தஹிய்யாத்து-ஸலவாத்து, துஆயே மாஸூரா ஓதி ஸலாம் கொடுத்து தொழுகையை முடிக்க வேண்டும்.

மேற்கண்ட ஒழுங்குமுறை விவரத்திலிருந்து 2, 3, 4-ரகஅத்துகளுள்ள பர்லு தொழுகை தொழுகவேண்டிய விவரம் தெரிந்து கொண்டீர்கள்.

பஜ்ருடைய பர்லு 2 ரகஅத்து தொழுகைக்கு நிய்யத்துச் சொல்லும்போது **இந்த பஜ்ருடைய பர்லு 2, ரகஅத்தை** என்று நிய்யத்துச் சொல்வதுபோல் **லுஹர்** தொழுகையானல் **லுஹருடைய பர்லு 4 ரகஅத்து** என்றும்,

**அஸர்** தொழுகையானல் **அஸருடைய பர்லு 4 ரகஅத்து** என்றும்,

**மக்ரிப்** தொழுகையானல், **மக்ரிபுடையபர்லு 3 ரக அத்து** என்றும்,

**இஷா** தொழுகையானல் **இஷாவுடைய பர்லு 4 ரக அத்து** என்றும்

அந்தந்த நேரத்தையும் ரகஅத்தையும் நிய்யத்தில் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

பர்லுகளை தனியாகத் தொழுகிறவர்களும், இமாமாக நின்று தொழுச வைப்பவர்களும் மேற்கண்ட விபரப்படி தொழுகவேண்டும்.

இமாமைத் தொடர்ந்து பர்லு தொழுகும் முக்ததிகள் நிய்யத்துச் சொல்லும் பொழுது **இந்த இமாமைப் பின்றொடர்ந்து தொழுகிறேன்** என்று நிய்யத்துடன் சேர்த்துச் சொல்ல வேண்டும்.

முக்ததிகள்முதல் ரகஅத்தில் **தனு** மட்டும்ஓதவேண்டும், **அவூது பிஸ்மில், ஸூரேபாத்திஹா**, எம்மு ஸூரா எந்த **ரக**

அத்திலும் ஓதக் கூடாது. இமாமைப் பின்பற்றி சும்மா நிற்க வேண்டும்.

இமாம் ருகூஇலிருந்து நிமிரும்பொழுது **ஸமி அல்லா ஹுலிமன் ஹமிதா** என்று சொல்லுவார். முக்ததீகள் **அல்லாஹும்ம றப்பனா லகல் ஹம்து** என்று சொல்லவேண்டும். ருகூஉ, ஸஜ்தாக்களில் ஓதப்படும் தஸ்பீஹுகள், இருப்பில் ஓதப்படும் **அத்தஹிய்யாத்து,** ஸலவாத்து, துஆயே மாஸுரா ஆகியவைகளை இமாமைப் போலவே முக்ததிகளும் ஓத வேண்டும்.

## ஸுன்னத்து 2 ரகஅத்து
## தொழுகும் விதம்

நிய்யத்துச் சொல்லும்போது **பர்லு 2 ரகஅத்து** என்பதற்கு பதிலாக **ஸுன்னத்து 2 ரகஅத்து** என்று சொல்ல வேண்டும். 2 ரகஅத்து ஸுன்னத்து தொழுவது, 2 ரகஅத்து பர்லு தொழுகையை தனியாகத் தொழுவது போல தொழுக வேண்டும். ஆனால் நிய்யத்துச் சொல்லும்போது **பர்லு** என்பதற்குப் பதிலாக **ஸுன்னத்து** என்று சொல்லிக் கொள்ள வேண்டும்.

## ஸுன்னத்து
## 4 ரகஅத்து தொழுகை

4 ரகஅத்து ஸுன்னத்துத் தொழுகையாயிருந்தால் 2 ரகஅத்து ஸுன்னத்து தொழுகையைப் போலவே 2 ரகஅத்து தொழுது 2-வது ரகஅத்தில் இருப்பிருந்து **அத்தஹிய்யாத்து-அப்துஹு வறசூலுஹு** வரை ஓதி நிலைக்குச்சென்று முன் 2 ரகஅத்து ஸுன்னத்து தொழுதது போலவே ஸூரேபாத்திஹாவும் ஸூராவும் ஓதி 2 ரகஅத்துத் தொழுது 4 வது ரகஅத்தில் கடைசி இருப்பு இருந்து **அத்தஹிய்யாத்து,** ஸலவாத்து, **துஆயே மாஸுரா** ஓதி ஸலாம் கொடுத்து தொழுகையை முடிக்கவேண்டும்.

**நபில் தொழுகை**
**தொழுகும் விதம்**

2 ரகஅத்து, 4 ரகஅத்து, நபில் தொழுகைகளை ஸுன்னத்துத் தொழுகையைப் போல் தொழுக வேண்டும்.

நிய்யத்துச் சொல்லும்போது மட்டும் **ஸுன்னத்து** என்பதற்குப் பதிலாக **நபில்** என்று நிய்பத்துச் சொல்லிக் கொள்ள வேண்டும்.

ஸுன்னத்து என்று நிய்யத்துச் சொல்லி நபில் தொழுதால், நபில் தொழுகை கூடிப் போகும்.

**வித்ரு வாஜிபு தொழுகை**
**தொழுதும் விதம்**

வித்ரு வாஜிபு 3 ரகஅத்தில் முதல் 2 ரகஅத்துகளை 2 ரகஅத்து பர்லு தொழுவது போல் 2 ரகஅத்து தொழுது இருப்பிருந்து அத்தஹிய்யாத்து—அப்துஹுவ ரஸுலுஹு வரை ஓதி நிலைக்குச் சென்று நிலையில் **அல்ஹம்து ஸுரா—ளம்முஸுரா** ஓதி **அல்லாஹு அக்பர்** என்று சொல்லி இரு கைகளையும் காது வரை உயர்த்தி 2வது தக்பீர் கட்டி **குனூத்** ஓத வேண்டும். குனூத் ஓதிய பிறகு, ருகூஉ, சிறு நிலை, ஸஜ்தாக்கள் செய்து இருப்பிருந்து அத்ஹிய்யாத்து, ஸலவாத்து, துஆயேமாஸுரா ஓதி ஸலாம் கொடுத்து தொழுகையைமுடிக்க வேண்டும்.

வித்ரு தொழுகை முடிந்தவுடன்,

ஸுப்ஹானல் மலிக்கில் குத்தூஸ் ஸுப்ஹானல் மலிச்கில் குத்தூஸ் என்று மெதுவாகவும், ஸுப்ஹானல்

மஃரிபில் ரக்அத்துல் அவ்வல் மிஸ்கின் மிஸ்ரி...

**மலிக்கில் குத்தூஸ் ரப்பில் மலாஇகத்தி என்று கொஞ்சம் உயர்ந்த சத்தத்துடனும் ஓதுவது முஸ்தஹப்பு.**

## பெண்கள் அனுஷ்டிக்க வேண்டியவைகள்

பர்லு, வாஜிபு, ஸுன்னத்து, நபில் முதலிய எல்லாத் தொழுகைகளும் ஆண்களுக்கு கூறப்பட்டிருப்பது போலவே பெண்களும் தொழுக வேண்டும்.

**தக்பீரில்**

இரு கைகளையும் காது சோணைக்கு சரியாக உயர்த்தாமல், இரு தோள் புஜங்களுக்கு நேராக மட்டிலும் உயர்த்தி நெஞ்சின் மீது தக்பீர் கட்டிக் கொள்ள வேண்டும்.

**ருகூஇல்**

பெண்கள் விலாவை விட்டு கைகளை பிரித்து வைக்கக் கூடாது. அள்ளையுடன் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். கொஞ்சமாகக் குனிய வேண்டும். விரல்களை விரிக்காமல் ஒன்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**ஸஜ்தாவில்**

குடங்கையை அள்ளையுடனும், நெஞ்சைத் துடையுடனும் சேர்க்க வேண்டும். கை விரல்களை சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும். இரு பாதங்களை நட்டு வைக்காமல் சாய்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

**இருப்பில்**

பெண்கள் பின்தட்டின் பேரில் உட்கார்ந்து கால்களை ஒடுக்கி பின்தட்டுடன் சேர்த்து வைத்துக் கொள்ள வேண்டும்.

# நோன்பு

ரமலான் மாதம் பிறை பார்த்ததிலிருந்து ஷவ்வால் மாதம் பிறை பிறக்கும் வரை சரியாக ஒரு மாதம் நோன்பு வைக்கவேண்டும், ரமலான் மாதம் சந்திரனைக்கணக் கெடுப்பதால் சில சமயங்களில் 29 நாட்களில் இந்த மாதம் முடிந்து விடும். 30 நாட்களிலும் முடிந்துவிடும். 29 நாட்களுக்குக் குறையமாட்டாது. 30 நாட்களுக்கு அதிகப்படவு மாட்டாது.

## நோன்பின் பர்ளுகள்

நிய்யத்துச் செய்தல்,

கிழக்கு வெளுத்ததிலிருந்து அதாவது மெய் வெள்ளை கீரியதிலிருந்து சூரிய அஸ்தமனம்வரை நோன்பிருக்க வேண்டும்.

இந்தக் காலவரையறைக்குள் சாப்பிடுதல், ஜலம் வகை பருக்களைக் குடித்தல், காம நிக்கிரகஞ் செய்தல் ஆகியவைகள் கூடாது.

"என்மீது கடமையான ரமலான் நோன்பை அல்லாவுக்காக வைக்கிறேன்." என்று நிய்யத்துச் செய்யவேண்டும்.

நோன்பு திறக்கும் போது "நாயனே உனக்காக நோன்பு வைத்தேன்; உன்னுடைய உணவின் பேரிலேயே நோன்பு திறக்கிறேன்" என்று கூறி நோன்பு திறக்க வேண்டும்.

## நோன்பின் முறிச்சல்கள்

நோன்பு வைத்து விட்டுப் பகற்காலத்தில் வேண்டுமென்றே உணவருந்தினாலும், மருந்து சாப்பிட்டாலும், அல்லது

எது ஜலம் மருந்து முதலியவைகளைக் குடித்தாலும் ஸ்திரீகள் முதலியவர்களிடம் காமநிக்கிரகஞ் செய்தாலும் நோன்பு முறிந்து விடுவதுடன் கப்பாராவும் கொடுக்க வேண்டும்.

கப்பாரா என்பது தொடர்ச்சியாக அறுபதுநாள் நோன்பு வைக்கவேண்டும். அல்லது 60 ஏழைகளுக்கு இரண்டு வேளை வயிறு நிறம்ப அன்னமிடவேண்டும். அல்லது ஒரு ஏழைக்கு 60 நாள் சாப்பாடு போட வேண்டும்.

வாய்நிறம்ப வாந்தி எடுத்தாலும், காதுக்குள் அல்லது நாசிக்குள் மருந்துபோட்டாலும், நோன்பு வைத்திருப்பது ஞாபகமில்லாமல் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது நோன்பு ஞாபகம் வந்து, நோன்பு முறிந்து விட்டதாக நினைத்து அப்புறமும் சாப்பிட்டாலும், இரவு இருக்கிறது என்று நினைத்து விடிந்தபின்ஸஹர்செய்தாலும்,சூரியாஸ்தமனமாகிவிட்டதுஎன்று நினைத்து சூரியாஸ்தமனத்திற்கு முன்பே நோன்பு திறந்து விட்டாலும், பிறரை முத்தம் கொடுப்பதால் அல்லது தொடுவதால் இந்திரியம் வெளிப்பட்டு விட்டாலும் நோன்பு முறிந்துவிடும். ரமலான் மாதம் முடிந்தபிறகு இதர மாதங்களில் அவைகளுக்குப் பதிலாக நோன்பு வைக்கவேண்டும்.

இரண்டு பெருநாள்களிலும், அய்யா முத்தஷ்ரீக்கிலும் நோன்பு வைக்கக்கூடாது. ஹைலு நிபாஸ்காரப் பெண்கள் நோன்பு வைக்கக்கூடாது. ஆனால், களாச்செய்ய வேண்டும்.

நோன்பு சம்பந்தமான அதிக விபரங்களை எம்மால் எழுதப்பட்ட "நோன்பின் மாட்சி" என்ற புத்தகத்தில் காணலாம்.

---

## ஜக்காத்து

---

ஆக்கில் பாலிகான முமினுக்கு 200 திர்ஹமுக்கு அதாவது 52—8—0க்குக் குறையாமல் குடும்பச் செலவு

கடன் முதலியவைகள் போக மேல் மிச்சமான சொத்திருக்குமாயின், அச்சொத்தில் நாற்பதில் ஒரு பங்கு ஜக்காத்துக் கொடுக்க வேண்டும். அந்தச் சொத்து அவனிடம் ஒரு வருஷம் வரை மீதமாக இருக்க வேண்டும். தங்க நகைகள், தங்கக் கட்டி, வெள்ளி நகை, வெள்ளிக் கட்டி முதலியவைகளுக்கு ஜக்காத்துக் கொடுக்க வேண்டும்.

மற்றைய விபரங்களைப் பெரிய நூற்களில் கண்டு கொள்ளலாம்.

## ஹஜ்ஜு

தன்னுடைய குடும்பச்செலவுக்கும், ஹஜ்ஜுக்குச் சென்றுவரும் வரை போதிய பொருளும்,ஹஜ்ஜுக்குச் சென்றுவர வழிச் செலவிற்கு வேண்டிய தொகையும், திடகாத்திரமும் உள்ள முஸ்லிம் வருஷத்திற்கு ஒரு விடுத்தம் மக்கமா நகர் சென்று ஹஜ்ஜுச் செய்வது பர்லாகும்.

ஹஜ்ஜு சம்பந்தமான முழு விவரங்களைஎம்மாலியற்றப்பட்ட "ஹஜ்ஜு யாத்திரை" அல்லது "ஹிஜாஸ் பிரயாணம்" என்ற எமது புத்தகத்தில் கண்டு தெரிந்து கொள்க.

## நஜீஸ்
(அசுத்தம்)

மனிதன், தின்ன ஹராமாக்கப்பட்ட பிராணி ஆகியவைகளின் மலம், ஜலம், தின்ன ஹலாலான பறவைகளில்,கோழி

வாத்து ஆகியவைகளின் மலம், ஓடுகிற ரத்தம், கள் ஆகியவை கள் கெட்டியான (நஜீஸுன்) அசுத்தமாகும். இவ்வகைகள் ஒருவஸ்துவில் ஒரு திரஹத்தைப் பார்க்கினும் அதிகமான அளவிற்கு பட்டுவிட்டால் அதனைச் சுத்தம்செய்வது பர்லு; சுத்தப்படுத்தாமல் தொழுகக் கூடாது.

தின்னஹலாலான பிராணிகள், குதிரைகள் ஆகியவைகளின் மூத்திரம், தின்ன ஹறாமான பறவைகளின் எச்சம் ஆகியவைகள் இலேசான(நஜீஸுன்)அசுத்தம். இவை ஒருஅவயவத்தின்மீது அல்லது துணியின்மீது நான்கிலொரு பாகத்திற்குப்பட்டு விட்டால் அதனைச் சுத்தம் செய்வது பர்லு.

அதனை சுத்தப்படுத்தாமல் தொழுவது கூடாது. நான்கில் ஒரு பாக அளவிற்கு குறைவாகப்பட்டிருந்தாலும் அதையும் சுத்தப்படுத்தாமல் தொழுதால் கக்ருஹுடன் தொழுகை கூடும்.

ஆகையால் தொழுகிறவன் சரீரத்திலோ, உடைகளிலோ தொழுகிற இடத்திலோ அசுத்தமில்லாமல் பேணி நடந்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளான்.

---

## குஸ்ல்

### (ஸ்நானம்)

---

ஸ்திரீ சம்போகம் செய்தால் ஆண் பெண் இரு பாலரும் ஸ்நானம் செய்வது அவசியமாகும். சுயமே இந்திரியத்தை வெளிப்படுத்தினும், அந்நியப் பெண்ணைப் பார்ப்பதனலோ

தொடுவதனாலோ இந்திரியம் வெளிப்பட்டாலும், தூக்கத்தில் கனவு கண்டோ, கனவு காணாமலோ வெளிப்பட்டாலும் ஸ்நானஞ் செய்ய வேண்டும். பெண்களுக்கு மாதவிடாய் வந்து நின்றாலும், பிள்ளை பிறந்த பின் வரும் பேற்று இரத்தம் வெளிப்பட்டு நின்றாலும் அப்பொழுதும் ஸ்நானம் செய்ய வேண்டும். இந்தச் சமயங்களில் ஸ்நானம் செய்வது கடமை. (பர்லு)

## ஸ்நானத்தின் பர்லுகள்

1. வாய் கொப்பளித்தல்,
2. நாசிக்கு நீர் செலுத்திச் சுத்தப்படுத்துதல்,
3. தேகம் முழுவதையும் நனைத்தல்.

## ஸ்நானத்தின் ஸுன்னத்துகள்

1. குளிப்பதற்கு முன் நிய்யத்துச் செய்தல், அதாவது "தன்மீது ஏற்பட்டுள்ள ஜனாபத்து என்னும்பெருந்தொடக்கை நீக்கிக் கொள்கிறேன்" என்று நிய்யத்துச் செய்ய வேண்டும்.

2. பிஸ்மில்லாச் சொல்லுதல்.

3. இரண்டு கைகளையும் மணிக்கட்டுவரை கழுவுதல்,

4. மர்ம ஸ்தானத்தைக் கழுவுதல்,

5. அசுத்தத்தைக் கழுவுதல்:

6, உளுச் செய்தல்.

7. தலையின்மீது மூன்று முறை, வலது தோழின் மீது 3 முறை, இடது தோழின் மீது மூன்று முறை ஜலம் வார்த்துக் கொள்தல்.

எனவே, பெருந் தொடக்கு உள்ளவர்கள் ஸ்நானம் செய்து துப்புரவாகாமல் மஸ்ஜிதுக்குள் செல்லுதல், தொழுதல், குர்ஆன் ஓதுதல், கஃபாவை தவாபு செய்தல், குர்ஆனைத் தொடுதல் ஆகியவைகள் கூடா.

மாதவிடாய், பேற்றுத் தொடக்கு ஆகியவைகளுள்ளவர்களும் மேற்கண்ட 5 காரியங்களைச் செய்யக் கூடாது. அத்துடன் அவர்கள் நோன்பு வைத்தல், [illegible]கம் செய்தல் அல்லது லீலைகள் செய்தல் கூடாது.

---

## பெரும் பாவங்கள்

---

சிறு பாவங்கள் நன்மைகள் செய்வதால் மன்னிக்கப் பட்டு விடுகின்றன. பெரும் பாவங்கள் தௌபாச் செய்யாமல் மன்னிக்கப்படமாட்டா. கொலை செய்தல், பெற்றோர்களை வருத்தப்படுத்துதல், அனாதைகளின் பொருள்களை அபகரித்தல், விபசாரஞ் செய்தல், ஸ்திரீ, புருஷர்கள்மீது விபசாரதோஷம் பொய்யாகக் கூறுதல், போதையுள்ளவைகளை அருந்துதல். மதுபான மருந்துதல். வட்டிவாங்குதல், வட்டிகொடுத்தல், லஞ்சம்வாங்குதல், லஞ்சம்கொடுத்தல், அநீதிசெய்தல், அக்கிரமம் செய்தல், புறம்பேசுதல் புறங்கூறுவதைக் கேட்குதல், மற்றவர்களைப் பார்க்கிலும் தன்னை உயர்ந்தவர் என நினைத்தல், வாக்குறுதியை நிறைவேற்றாதிருத்தல், அந்நிய ஸ்திரீயைக் கெட்ட எண்ணத்துடன் பார்த்தல், அமானிதத்தை மோசஞ் செய்தல், பொய்ச் சாக்ஷியம் செய்தல், உண்மையை மறைத்தல், பொய் பேசுதல், பொய்ச் சத்தியம் செய்தல், அல்லாஹுதஆலாவின் பெயர் சொல்லாமல் மற்றவர்களின்

பெயர் சொல்லி சத்தியம் செய்தல், அக்கிரமஸ்தர்களை முக ஸ்துதி செய்தல், நிறை, அளவு ஆகியவைகளில் கூட குறையைச் செய்தல், சூதாடுதல், முஸ்லிமல்லாதாரின் மத சம்பந்தமான ஆசாரங்களை நல்லவைகளென மதித்தல், குறி காரர்கள், கோடங்கி சொல்பவர்கள் சொல்லும் பேச்சுக்களை மெய்யென்று நம்புதல், ஒருவரை அவமானப் படுத்துதல் கோள் சொல்லுதல், வஞ்சனை, சூனியம் செய்தல், கற்றோரை கேவலமாக மதித்தல், தாடியைச் சிரைத்தல் அல்லது சிரைக் கும்படிச் செய்தல் முதலிய காரியங்கள் பெரும்பாவங்களாகும், இவைகளைத் தௌபாச் செய்தால் தான் இறைவன் மன்னிப் பான். அதாவது இந்தப் பாவங்களைச் செய்வதை விட்டுவிட வேண்டும். இனி மேல் மீண்டும் செய்வதில்லை என்று உறுதி கொள்ள வேண்டும். முன்னர் செய்த பாவச் செயலுக்காக வருந்தி அந்தப் பிழையைப் பொறுக்கும்படி ஆண்டவனிடம் மன்னிப்புத் தேடி துஆக் கேட்க வேண் டும். பிறரிடம் அக்கிரமம் செய்திருந்தால் அவர்களிடமும் மன்னிப்புத் தேட வேண்டும். பிறர் பொருளை அபகரித்திருந் தால் அதனை அவர்களிடம் வாபஸ் செய்யவேண்டும்.

## இணை வைத்தல்

எல்லாப் பாவங்களிலும் மி• மிகப்பெரிய பாபம் ஆண்ட வனுக்கு இணைவைத்தலாகும். ஒரு முஸ்லிம் இணைவைத் தால் அவன் இஸ்லாம் மதத்தைவிட்டு மாறியவனாகிவிடுவான். அவன் செய்த நல்ல காரியங்களும்கூட அழிந்துபோகும், இணை வைப்பதென்பது அல்லாஹுத ஆலாவைத் தவிர விக்கிரகங்களையேனும் மற்றும் ஆண்டவனுடைய சிருஷ்டிக ளில் எதையேனும் வணங்குவதாகும். எனவே அல்லாஹுத ஆலாவைத் தவிர்த்து வேறுயாரையும் வணங்கக்கூடாது வணக்கத்துக்குரியவன் அவன் ஒருவனைத் தவிர வேறு யா இல்லை என்பதில் உறுதியாக இருக்கவேண்டும்.

# தயம்மம்

உழுவுக்கோ, குஸ்லுக்கோ தண்ணீர் ஒரு மைல் விஸ்தீரணத்திற்கு தேடிப்பார்த்தும் கிடைக்காவிடினும் அல்லது வியாதியஸ்தன் தண்ணீரைக் கொண்டு உழூச் செய்தாலும் குஸல் செய்தாலும் அவனுக்கு ஆபத்துண்டாகுவதாயிருந்தாலும், அல்லது வியாதி அதிகரிக்கக்கூடியதாயிருந்தாலும் தண்ணீரைக் கொண்டு உழூ, குஸ்ல் செய்வதற்குப் பதிலாக "தயம்மம்" செய்து கொள்ளலாம் அதாவது:—

பூமியின் மண்மீது அல்லது மண் இனத்திலுள்ள கட்டி, சுவர் மீது, அல்லது தூசிப் படர்ந்த கல், மரம் முதலியவைகள் மீது விரல்கள்உட்பட இரண்டு உள்ளங் கைகளும் படும்படி அடித்து முகம் பூராவும் தடவிக் கொள்ள வேண்டும். இரண்டாவது தடவை முன் போலவே இரு கைகளையும் தொட்டு இரண்டு முழங் கைகள் வரை இரண்டு கைகளையும் கைகள் மீதும் தடவ வேண்டும்.

"உழுவிற்குப் பதிலாக அல்லது குஸலுக்குப் பதிலாக தயம்மம் செய்கிறேன்" என்று நிய்யத்துச் செய்வதும் இரண்டு கைகளையும் மேலே கூறியபடி பூமியின் மீதோ, மண் மீதோ கையை அடித்து முதல் தடவை முகத்தையும், 2வது தடவை முழங் கைகள் வரை இரு கைகளையும் தடவுவதும் பர்ளுகளாகும். இவ்வாறு தயம்மம் செய்து கொண்டு தொழுகையை நிறைவேற்றலாம்.

## முடிவுரை

ஈமான், இஸ்லாம், தொழுகை, நோன்பு, ஹஜ்ஜு, ஜக்காத்து முதலிய இஸ்லாமிய கட்டளைகளைப் பற்றி இந்நூலில் குறிப்பிடப் பட்டுள்ளதைப் பார்க்கினும் அதிக விவரங்கள் தெரிய விரும்புவோர் இந்நூலின் 2-ம் பாகத்தின் மூலம் தெரிந்து கொள்ளலாம். ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம்.

78136

# புதிதாக வெளிவந்துள்ள இஸ்லாமிய நூற்கள்

"ஸைபுல் இஸ்லாம்" சொந்தப் பிரசுரம்

| | | |
|---|---|---|
| திரு குர்ஆனும், பிற மதத்தாரும் | விலை அணா | 0—10—0 |
| திரு குர்ஆனும், ஐரோப்பியரும் | விலை அணா | 0—4—0 |
| இந்திய முஸ்லிம் மன்னர்களின் ஆட்சி | விலை அணா | 0—8—0 |
| இஸ்லாமும், உலகமும் | விலை அணா | 0—12—0 |
| அயோத்திய குப்ருஸ்தானில் ஒரு நற்பாக்கிய ஆத்மா; அல்லது சாவித்திரியும், பரிசுத்த குர்ஆனின் தெய்வீகசக்தியும் | விலை ரூ. | 1—0—0 |
| பர்தா பிரமாணங்கள் | விலை அணா | 0—4—0 |
| காதியானிக் கொள்கைகள் (விளக்கம்) அத்தாவுல்லா ஷா புகாரி வழக்கு | விலை அணா | 0—8—0 |
| காபுலின் கன்னிகை | விலை அணா | 0—10—0 |

## நபிகள் திலகம்.

பள்ளி மாணவர்களுக்குப் பாடப் புத்தகம். இது அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 1-ம் பாகம் | விலை அணா | 0—4—0 |
| 2-ம் பாகம் | விலை அணா | 0—4—0 |
| 3-ம் பாகம் | விலை அணா | 0—5—0 |
| ஹஜ்ஜு யாத்திரை | விலை அணா | 0—4—0 |

மானேஜர்:

"ஸைபுல் இஸ்லாம்" புத்தகசாலை,

47, செம்புதாஸ் தெரு, சென்னை.

# "ஸைபுல் இஸ்லாம்"

ஓர் உயரிய வார இருமுறை
இஸ்லாமியப் பத்திரிகை

இஸ்லாம் மார்க்க, முஸ்லிம் சமூக முன்னேற்றத்திற்கும், இஷாஅத்தெ இஸ்லாத்திற்கும் அரும் பெருந் தொண்டாற்றி வருவது **"ஸைபுல் இஸ்லாம்" ஒன்றே.**

"ஸைபுல் இஸ்லாம்" வாசகர்கள் மார்க்க, தேசிய, ராஜீய ஞானம் பெறுவதில் தடையிராது.

முஸ்லிம் உலகசமாசாரங்களையும், முழு உலகசமாசாரங்களையும் அப்போதைக் கப்போது முஸ்லிம்கள் நடந்துகொள்ள வேண்டிய மார்க்க, சமூக, ராஜீய விஷயங்களையும் முஸ்லிம் சமூகத்தினருக்குப் போதித்து உணர்ச்சியுண்டுபண்ணி வருவது "ஸைபுல் இஸ்லாம்" ஒன்றே.

இதன் சந்தா உள் நாட்டுக்கு

| | |
|---|---|
| வருஷம் 1 க்கு | 10—0—0 |
| 6 மாதத்திற்கு | 5—8—0 |
| 3 மாதத்திற்கு | 3—0—0 |

வெளி நாட்டுக்கு

| | |
|---|---|
| வருஷம் 1 க்கு ரூ | 12—0—0 |
| 6 மாதத்திற்கு ரூ | 6—0—0 |

மானேஜர்:

"ஸைபுல் இஸ்லாம்" ஆபீஸ்,
47, செம்புதாஸ் தெரு, சென்னை.